# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 செப்டம்பர் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**III.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**IV.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**V.** **மனுக்கள்**

**VI.** **கேள்விகள் / இடைக்கால கேள்விகள்**

**01.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2018.08.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/45)**

அ. i. ம/ப கிழக்கு ஹேவாகம கோரலயே (ஹங்வெல்ல) பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் நிதி ரூபா. 59 கோடியானது தனியார் நிதித் தாபனம் ஒன்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ? இல்லையாயின் ஏன் ?

ii. குறிப்பிட்ட நிதிக்குரிய வட்டி மற்றும் ஆரம்ப நிதியினை மீண்டும் பெற்றுக் கொள்வதில் ஏதாவது பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளதா ?

iii. இந் நிதியினை முதலீடு செய்ய கூட்டுறவு அபிவிருத்தி பதிவாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி ஒன்று பெறப்பட்டுள்ளதா ?

iv. அவ்வாறான எழுத்து மூலமான முன் அனுமதி ஒன்றினைப் பெற்றுக் கொள்ளவில்லையாயின் அது தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஆ. i. இப்பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் (ஹங்வெல்ல) யின் நிதி 2012.05.14 ஆந் திகதி தொடக்கம் பயன்படுத்தப்பட்டுள்ள முறை தொடர்பாக முறையாக ஆராய்ந்து பார்க்கும் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

ii. இந் நிதியினை முதலீடு செய்தது தொடர்பாக வருடாந்த கணக்காய்வின் போது விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா ?

iii. அவ்வாறே நிதி ஒழுங்குபடுத்தும் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் குழுவில் அல்லது F28 மாதாந்த வழிகாட்டல் அறிக்கை மீளாய்வுக் குழுவில் இது தொடர்பாக விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா ?

**02.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2018.08.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/46)**

அ. மேல் மாகாணத்தின் கூட்டுறவு நியதிச் சட்டத்தின் 41 ஆவது பிரிவிற்கு முரணாக ம/ப கிழக்கு ஹேவாகம கோரலயே பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளனர் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. அப்படியாயின் அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கை யாது ?

இ. குறித்த சங்கத்தின் பிரதேச செயற்குழுத் தேர்தல் இறுதியாக எப்போது நடாத்தப்பட்டது ?

ஈ. அதற்கிணங்க இத் தேர்தலை நடாத்துவது பல வருடங்கள் தாமதமாகி உள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. அவ்வாறு தாமதப்படுத்தப்பட்டுள்ள போதும் கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் 60 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

- சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி

**03.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.08.21 ஆந் திகதி சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/ADG - 04)**

அ. மாகாண சபை புதிய கட்டடத்தின் சபை மண்டபத்தினை ஒளிப்பதிவு செய்தல் மற்றும் ஒலிபெருக்கி வசதிகள் புதிய தொழிநுட்ப வாக்குச் சீட்டினை அடையாளமிடல் மற்றும் ஒலிபெருக்கி அமைப்பினை பொருத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக கேள்வி கோரப்பட்டுள்ளதா ?

ஆ. மேற் குறிப்பிட்ட கேள்விக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை ?

இ. கேள்விச் சபையினை அங்கத்துவம் செய்தவர்கள் யாவர் ?

ஈ. முன்வந்த தாபனங்கள் மற்றும் விலை மனுக்கள் யாவை ?

உ. எத் தாபனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது ?

ஊ. தெரிவு செய்யப்பட்டுள்ள தாபனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள விலை மனு எத்தனையாவது ?

எ. அத் தாபனத்தை தெரிவு செய்யக் காரணம் யாது ?

ஏ. குறித்த தாபனம் முன்வைத்த தகைமைகளின் விபரம் மற்றும் விலை மனு தொடர்பான முழுமையான அறிக்கையை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/49)**

அ. பட்ட பின் படிப்புக் கல்வி டிப்ளோமா பாடநெறியைக் கற்கும் ஆசிரியர்களுக்கு அப் பாடநெறிக்கான கட்டணங்களில் அரைவாசியைச் செலுத்த மாகாண சபையினால் இதற்கு முன்னர் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளனவா என்பதை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அவ்வாறு இல்லாதவிடத்து சில கல்வி வலயங்களில் ஆசிரியர்களுக்காக அந்த படி செலுத்தப்படுவதில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. விஷேடமாக பிலியந்தலை கல்வி வலயத்தில் எதன் அடிப்படையில் இக் கொடுப்பனவு 2006 தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவிப்பீர்களா ?

ஈ. வினைத்திறன் மிக்க சேவை ஒன்றுக்காக செலுத்தப்படும் இந்த நிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/50)**

அ. ஆளுங் கட்சியின் பிரதான ஏற்பாட்டாளர், சபாநாயகர், எதிர்க் கட்சியின் பிரதான ஏற்பாட்டாளர் பதவிகளுக்காக உறுப்பினர் ஒருவருக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் அந்தந்த பதவிகளுக்கு இணங்க யாவை ?

ஆ. அப் பதவிகள் சிறப்புரிமைகள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்தம் செலவு செய்யப்படும் நிதியை பதவிகளின் அடிப்படையில் வெவ்வேறாக குறிப்பிட இயலுமா ?

இ. அப் பதவிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களும் கடமைகளும் யாவை ?

**06.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)18/51)**

அ. மேல் மாகாண சபையின் புதிய கட்டடத்தை நிர்மாணித்தல் மற்றும் எல்லா வசதிகளுடன் பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளின் மொத்த பெறுமதி எவ்வளவு ?

ஆ. அம் மதிப்பீடுகளுக்கு இணங்க வேலை நிறைவு செய்யப்படாத நடவடிக்கைகள் எவை ?

இ. வேலை நிறைவு செய்யப்பட்ட எல்லா நடவடிக்கைகளுக்குமாக செலவு செய்த மொத்த நிதி எவ்வளவு ?

ஈ. அது தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றினை சபைக்கு முன்வைப்பீர்களா ?

**07.** **கௌரவ ரஜித ரங்கன ஹபுஆரச்சி உறுப்பினரினால் கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)18/52)**

அ.
- i. நிலைபெறு பண்ணைகளை அபிவிருத்தி செய்வதன் கீழ் 600 பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா ?
- ii. அப் 600 பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக விலங்கு அபிவிருத்தி ஆலோசனையாளர்களுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதா ?
- iii. அப் பொறுப்பினை மேற்கொள்வதை விலங்கு அபிவிருத்தி ஆலோசனையாளர்கள் நிராகரித்துள்ளனரா ? இல்லையாயின் ஏன் ?

ஆ.
- i. குறித்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது கால்நடை அபிவிருத்தி ஆலோசனையாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கையினால் தாமதமாகின்றதா ?
- ii. அத் தொழிற்சங்க பிரச்சினை தொடர்பாக கௌரவ ஆளுநரினால் வழங்கிய முடிவு தொடர்பாக நீங்கள் அறிந்துள்ளீர்களா ? அம் முடிவு யாது ?
- iii. அம் முடிவினை நடைமுறைப்படுத்துவது எதன் காரணத்தினால் மேலும் தாமதமாகி இருந்தது ?
- iv. கௌரவ ஆளுநரின் முடிவு மற்றும் கட்டளையினை நடைமுறைப்படுத்துவதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**08.** **கௌரவ ரஜித ரங்கன ஹபுஆரச்சி உறுப்பினரினால் கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)18/53)**

அ.
- i. விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணிக்கு இணங்க மக்கள் சுகாதாரம் தொடர்பாக செயற்படுவதற்குரிய பொறுப்பொன்று காணப்படுகின்றதா ?
- ii. நீர்வெறுப்பு நோயை தடுத்தல் மற்றும் மிருகங்களை மலடாக்கும் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் பொறுப்பு விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?
- iii. அவ்வாறு ஒப்படைக்கப்பட்டிருந்தால் அது எதன் அடிப்படையில் ? எதன் காரணத்தினால் ?

ஆ.
- i. நீர்வெறுப்பு நோயை தடுத்தல் மற்றும் மிருகங்களை மலடாக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் நடவடிக்கை இதுவரை இலவசமாகவே மேற்கொள்ளப்பட்ட சேவை என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?
- ii. தற்போது அதற்காக விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மூலம் நிதி ஒன்று அறவிடப்படுகின்றதா ?
- iii. அவ்வாறு அறவிடப்பட்டால் அது எதன் அடிப்படையில் ?
- iv. அவ்வாறு அறவிடப்படும் நிதி மாகாண சபைக்கு அறவிட்டுக் கொள்ளப்பட்ட பின்னர் மீண்டும் உரிய உத்தியோகத்தருக்கு மீளளிப்பு செய்யப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?
- v. அரச சொத்து மற்றும் சேவைக் காலத்தினை பயன்படுத்தி சில குழு ஒன்று மக்களிடமிருந்து நிதி ஒன்றினை பெற்றுக் கொள்வது இதன் மூலம் மறைமுகமாக இடம் பெறுகின்றது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. இச் சேவையை மீண்டும் மக்கள் சுகாதார சேவையின் கீழ் மாற்றி இலவசமாக அச் சேவையினை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

2018 ........... **ஆம் ஆண்டின் மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை நியதிச் சட்டம்**

(முதலாம் முறை வாசித்தல்)

மேல் மாகாணத்தின் கடற்பகுதிகளில் மற்றும் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக் கைத்தொழிலினை ஒழுங்காக முகாமைத்துவம் செய்வதற்காகவும், மேல் மாகாணத்தில் கடற்றொழிலாளர்களின் சமூக நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதற்காகவும், மேல் மாகாணத்தின் நுகரவோர்களான மக்களுக்கு நீதியான விலையில், மீன் மற்றும் அதனோடு இணைந்த உற்பத்திகளை விற்பதற்காகவும்,

அவ் விடயங்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு மாகாண மீன்பிடிப் பணிப்பாளர் பதவி ஒன்றினை ஸ்தாபிப்பதற்கும், மாகாணத்தில் கடற்றொழில் நடவடிக்கையினைப் பேணிச் செல்வதற்காகவும் ஆலோசனைச் சபை ஒன்றினை நியமிப்பதற்காகவும், அது தொடர்பாக அல்லது அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்குரிய நியதிச் சட்டம் ஒன்றாகும்.

**02.** **கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**மேல் மாகாணத்தின்** 2018 ............ **ஆம் ஆண்டின் மேல் மாகாண விவசாய சேவைகள் அதிகார சபைகள் திருத்திய நியதிச் சட்டம்**

(முதலாம் முறை வாசித்தல்)

{ 2012 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாண விவசாய சேவைகள் அதிகார சபை நியதிச் சட்டத்தினை திருத்துவதற்கான நியதிச் சட்டம் ஒன்றாகும். }

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ குணசிறி ஜயனாத் அவர்கள்**

தற்போதைய கௌரவ பிரதம மந்திரியினால் இலங்கை பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் ஒன்றின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த ஆயுத மோதல்களின் போது அதன் பலாபலன் ஒன்றாக அல்லது அதனோடு தொடர்புடைய பின்னணி ஒன்றாக பாதிப்பிற்கு உட்பட்டுள்ள நபர் ஒருவருக்காக ஏதாவது நிதி ரீதியான கொடுப்பனவு அல்லது பொருள் ரீதியான கொடுப்பனவினை வழங்குவது, நினைவுச் சின்னங்களைச் செய்தல் மற்றும் மரணமெய்தியவர்களின் நினைவு கூரும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டரீதியான ஏற்பாட்டினை வழங்கும் நிலைமையினுள் முழுமையாக கொடூரமான பயங்கரவாதிகளுக்கு இழப்பீட்டினை வழங்கும் பின்னணி ஒன்று ஏற்படுகின்ற படியால் அது தொடர்பாக பாரிய அதிருப்தியை அரசுக்கு தெரிவிப்பதுடன் அச் சட்டமூலத்திற்கு உரிய பிரிவுகளான 27(ஆ) (1)(அ) அகற்றி அதற்குப் பதிலாக புளுமென்டல் மீதொட்டுமுல்லை குப்பை மேடு சரிந்து விழுந்ததினால், சாலாவ ஆயுதக் களஞ்சியம் வெடித்ததினால்,

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதினால் நிகழ்ந்த விபத்துகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மற்றும் சொத்துக்களுக்கு இழப்பீட்டினை செலுத்துவதற்கு ஏற்ற முறையில் சட்ட ரீதியான ஏற்பாடு ஒன்றினை இச் சட்டமூலத்தில் உள்ளடக்குமாறு இந்த மேல் மாகாண மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

**(பி/வி110/VI(1)/18/03)**

{2018.08.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் தொடர்பானது}

**02.** **கௌரவ சுனில் வடகல அவர்கள்**

புளூமென்டல் குப்பை மேடு, மீதொடுமுல்லை குப்பை மேடு, கரதியான குப்பை மேடு போன்ற குப்பை மேடுகள் கவிழ்ந்ததன் காரணமாக மனித உயிர்கள் மற்றும் முழு சுற்றாடலும் அழிவுக்கு உட்பட்ட வேளையில் அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அலுவலகர்கள், தாபனங்கள் அவற்றை தடுப்பதற்கு நிரந்தர தீர்வினை வழங்குவதாகக் குறிப்பிட்டு பல்வேறுபட்ட பிரசாரங்களை மேற்கொண்டனர். மீதொடுமுல்லை குப்பமேடு, புளூமென்டல் குப்பை மேடு ஆகியவற்றை நகர பூங்காக்களாக மாற்றுவதாக அறிவிக்கப்பட்டது. தற்போது அந்த குப்பை மேடுகள் அவ்வாறே காணப்படுகின்றன. நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்று இல்லை. களனி கங்கை ஆண்டு முழுவதும் பெருக்கெடுக்கும் போது அதில் மூழ்கும் மக்களுக்கு அச் சந்தர்ப்பத்தில் உணவுப் பொதி, உலர் உணவுப் பொருட்களை வழங்கி தற்காலிக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ் எல்லா விபத்துக்களுக்கும் அந்தந்த விடயங்களுக்குரிய அமைச்சு தலையிட்டு நீண்ட கால தீர்வொன்றினை முன்வைக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)18/04)**

**03.** **கௌரவ உபாலி கொடிகார அவர்கள்**

மேல் மாகாணத்தின் கல்வி வலய மட்டத்தில் அமைந்துள்ள விஷேடதேவையுள்ள பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 182 ஆகுவதுடன், அப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விஷேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 3713 ஆகும்.

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் சாதாரண பிள்ளைகளுக்கு ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையின் பெறுபேற்றின் கீழ் புலமைப் பரிசில் உதவி நிதி ஒன்று, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹபொல புலமைப்பரிசில் மூலம் புலமைப் பரிசில் நிதி ஒன்று வழங்கும் முறை ஒன்று காணப்பட்ட போதும் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவி ஒன்றினை பெற்றுக் கொடுக்கும் முறை ஒன்று இல்லை.

மேல் மாகாணத்தின் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக, கல்வியினை பெற்றுக் கொடுக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்காக அப் பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக ஏதாவது படி ஒன்று அல்லது உதவி நிதி ஒன்றினை வழங்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)18/05)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.08.21** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.